பக்கங்கள் - 07
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 16 ஞாயிற்றுக்கிழமை (30.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005

இல.44, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
கட்டுமே

சோதனை நடவடிக்கைகளின்போது

## பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாது நடந்து கொள்ளுங்கள்

### பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர் அறிவுரை

(கொழும்பு)

சோதனையின்போதும் தனிமைப்படுத்தல் சட்டத்தை அமுல்படுத்தும்போதும் பொது மக்களைத் துன்புறுத்தவோ சங்கடப்படுத்தவோ கூடாது என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன, பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என் 02

கொரோனாத் தொற்றால்

## யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளரான திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி கோவிட்-19 நோய்த் தொற்றுக் குள்ளாகி உயிரிழந் 02

# யாழில் இன்று தொடக்கம்

# கொரோனா தடுப்பூசி

### 61 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆரம்பம்

### ஆரம்பித்து வைக்க யாழ்.வருகிறார் அமைச்சர் நாமல்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்குக் கோவிட் தடுப்பூசி வழங்கும் திட்டம் இன்று 61 கிராம அலுவலர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ். வருகின்றார்.

கோவிட் நோய்த் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படும் இடங்களுக்குத் தடுப்பூசி மருந்து வழங்கலில் முன்னுரிமை யளிக்கப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)




## கொரோனா +2,882

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,882 பேர் நேற்று அடையாளம் காணப் பட்டுள்ளனர். 02

## யாழில் தடுப்பூசி வழங்கப்படவுள்ள

### கிராமசேவகர் பிரிவு பட்டியல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் தெரிவு செய்யப்பட்டிருக் கும் கிராம சேவ 02

கொரோனாவால்

## வவுனியாவில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயதான நபர் ஒருவர் கோவிட் தொற்று நோயால் நேற்று மரணமடைந்துள்ளார். 02

## பயணத் தடை நீடிப்பு குறித்து மீளாய்வின் பின் தீர்மானம்

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

ஜூன் 7ஆம் திகதிக்கு பின்னரும் பயணத் தடையை நீடிப்பது குறித்து உரிய மீளாய்வின் பின்னரே தீர்மானம் எடுக்கப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் 02

19 சிறுவர்கள் உட்பட

## யாழ்.குடாநாட்டில் கொரோனா சதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1½ வயது பெண் குழந்தை மற்றும் 19 சிறுவர்கள் உட்பட 100 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சில நாட்கள் தடைப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக ஆய்வு 02

இலங்கையில்

## புகைத்தலை மட்டுப்படுத்திய கொரோனா

(கொழும்பு)

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுடன் புகைப்பிடிப்பவர்களில் 48 02

BOC Travels
SUBSIDIARY OF BANK OF CEYLON
BOC Travels (Pvt) Ltd
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்
Hospital Road, Jaffna.
எமது நிறுவனம் தற்போதைய பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள வேளையிலும் வெளிநாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டை வழங்குகின்றது.
உடன் அழையுங்கள்
24 மணிநேர தொடர்புகளுக்கு
070 384 9335/070 395 1794
sureshk@boctravels.com
(C-2197)

## யாழ்.பல்கலை...

துள்ளார்.

தனியார் நிதி நிறுவனத்தில் பணிபுரியும் விரிவுரை யாளரின் குடும்ப உறுப்பினர் ஒரு வருக்கு கொரோனா தொற்று கண்டறி யப்பட்ட நிலையில் விரிவுரையாள ருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோத னையின்போது அவருக்கு தொற்று உறுதியானது.

பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கோவிட் - 19 சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

சுகாதார விதிமுறைகளின்படி கோம் பயன்மணல் மயானத்தில் நேற்றுச் சனிக்கிழமை அவரது உடல் மின் தகனம் செய்யப்பட்டது. (ம-3,18,33)

## பயணத் தடை...

அமுலில் உள்ள பயணத் தடை ஜூன் 7ஆம் திகதி காலை 4 மணிக்கு தளர்த் தப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

அதன்பின்னரும் பயணக் கட்டுப் பாடுகள் தொடருமா என்பது குறித்து இன்னும் எதுவும் அறிவிக்கப்பட வில்லை.

இது தொடர்பில் ஊடகங்களால் வினவப்பட்ட கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே பதில் சுகாதார சேவை கள் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது தொடர் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அத னால் ஏற்படும் பெறுபேறுகளை 14 நாட்களுக்குப் பின்னரே அறியக்கூடிய தாக இருக்கும். அதற்காக நாம் தற்போது சும்மா இருக்கவில்லை. நிலைமை நாளாந்தம் மீளாய்வு செய்யப்படு கின்றது.

நாட்டின் தற்போதைய நிலை, அடுத்து சில நாட்களில் ஏற்படும் நிலை, தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் வீதம், அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களின் எண் ணிக்கை உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்த பின்னரே, எதிர்வரும் 7ஆம் திகதிக்கு பின்னரான காலம் குறித்து தீர்மானம் எடுக்கப்படும்" என்றார். (ம-3)

## வவுனியாவில்...

ஸ்ரீராமபுரத்தைச் சேர்ந்த குறித்த நபர் சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத் தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலை யின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் மரணமடைந்துள்ளார். (ம-3,299)

## +2,882...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக் கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 180,593 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## யாழில் தடுப்பூசி...

கர் பிரிவுகள் விபரம் வெளியாகியுள் ளன.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் 16 கிராம அலுவலர் பிரிவுகளுக் கும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் 13 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் காரைநகர் சுகாதார வைத்திய அதி காரி பிரிவின் கீழ் ஒரு கிராம அலு வலர் பிரிவுக்கும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் 5 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் கோப்பாய் சுகாதார வைத்திய அதி காரி பிரிவின் கீழ் 4 கிராம அலு வலர் பிரிவுகளுக்கும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கும் பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் 5 கிராம அலுவலர் பிரிவு களுக்கும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் 10 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தடுப் பூசி வழங்கப்படவுள்ளது. (ம-3)

## யாழ்.குடாநாட்...

கூட பிசிஆர் பரிசோதனைகள் நேற்று மீண்டும் தொடங்கியுள்ளன.

குறித்த ஆய்வுகூட முடிவுகளின் அடிப்படையிலேயே புதிய தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 28 பேரும் யாழ்ப்பாணம் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் 10 பேரும் சாவ கச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடை யாளம் காணப்பட்டவர்களில் 7, 10, 11, 13, 14 வயதுகளை உடைய சிறுமிகள் 5 பேரும் 8, 12 வயதுகளுடைய சிறு வர்கள் இருவரும் உள்ளடங்குகின்ற னர்.

அதேபோல யாழ்ப்பாணம் சுகா தார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டவர்களில் 8, 15 வயதுகளையுடைய சிறுமிகள் இருவர் 14 வயதுச் சிறுவன் ஒரு வனும் உள்ளடங்குகின்றனர்.

சாவகச்சேரியில் அடையாளம் காணப்பட்டவர்களில் 6, 9 வயது களை உடைய சிறுவர்கள் இருவரும் 12 வயதுடைய சிறுமி ஒருவரும் உள் ளடங்குகின்றனர். (ம-3,18,33)

## கொரோனா தடுப்...

யாழ். மாவட்டத்தில் கோவிட் தடுப் பூசி வழங்கும் செயற்பாடு இன்று காலை 8 மணி முதல் முன்னெடுக்கப் படவுள்ளது என மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற தடுப்பூசி வழங்கும் செயற்பாடு தொடர்பான முன் னேற் பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இந்தத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப் படவுள்ளது.

காலை 8 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை ஒரு அமர்வும், அதன் பின்னர் பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 8 மணி வரை இன்னொரு அமர்வும் நடைபெறவுள்ளது.

நேரத்துக்கு மாத்திரம் அந்த இடங் களுக்கு வருகை தந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்தோடு கிராம அலுவலர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களால் தங்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட வுள்ளது என உறுதிப்படுத்தினால் மாத்திரமே தடுப்பூசி வழங்கும் இடத் துக்குச் செல்ல வேண்டும்.

எனவே, நீங்கள் தேவையில்லாது அலையாது தங்களுக்குரிய வழிகாட் டல் கிடைத்த பின்னர் தடுப்பூசி வழங் கும் இடத்துக்குச் செல்ல முடியும்" என்றார். (ம-3,18,33,101)

## பொதுமக்களு...

றும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகள் விதிக் கப்படும்போதும் தனிமைப்படுத்தல் சட்டங்களைச் செயற்படுத்தும் போதும் பொலிஸார் வாகனங்கள் மற்றும் மக்களை வீதித் தடைகள் மற்றும் பிற இடங்களில் சோதனை செய்கின்றார் கள்.

இருப்பினும், சில பொலிஸ் அதி காரிகள் பொதுமக்களுக்குச் சங்க டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற் படுவது வீடியோ காட்சிகளிலும் ஊட கங்களிலும் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் மூத்த பொலிஸ் அதிகாரிகளுடனான கூட்டத்தில், சில அதிகாரிகளின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்த பொலிஸ்மா அதிபர், இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மூத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி யுள்ளார். (ம-3)

## புகைத்தலை...

சதவீதமானவர்கள் புகைப் பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தியுள்ளனர் என்று மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்பான தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு புகைப் பிடிக்கும் பழக் கத்தை நிறுத்தியுள்ளவர்களில் சுமார் 50 சதவீதமானவர்கள் மீண்டும் ஒரு போதும் புகைப் பிடிக்க மாட்டார்கள் என் றும் மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்பான தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)


31 ஆம் நாள்
நினைவஞ்சலியும்
நன்றி நவில்லும்

அமரர் சேதுகாவலர் இராசவல்லவன்

உடம்பொடு உயிராய்: 12.09.1942
உயிரில் உடம்பாய் : 30.04.2021



சேதுகாவலர் குடும்பத்தின்
முதல்வனாய் வந்துதித்தீர்!
சேனைத் தலைவனாய்
உடன் பிறந்தோரை உய்வித்தீர்!!
புன்முறுவல் பூத்த முகம்
உதிரும் வார்த்தைகளில் தெளிவு
இன்னமும் என்முன்னே விம்பமாய்
கல்வியால் நீர் விதைத்த விதைகளெல்லாம்
நல்ல பெரும் தருக்களாய்
உங்கள் புகழ் பாட இமைக்கும்
பொழுதினிலே உயிர் நீங்கினாலும்
எம்மைப் போன்ற பலரது நினைவுகளில்
நீங்கள் என்றும் நீங்காது வாழ்கின்றீர்கள்
என்றறிந்து நாங்கள் தேறுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவர் உயிர்நீத்த செய்தியறிந்து உடனுதவிய உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் எம் துயரில் நேரில் பங்குகொண்டோர், தொலை பேசி, மின்னஞ்சல் மற்றும் வலைத்தளங்களூடாக ஆத்ம சாந்திக்காகப் பிரார்த் தித்தோர், துண்டுப்பிரசுரம், கண்ணீர் அஞ்சலி மூலமும் மலர்வளையங்கள் சாத்தியும் துயர் பகிர்ந்தோர், இறுதி யாத்திரையில் இரங்கல் உரை நிகழ்த்தி யோர் மற்றும் பல வழிகளில் இன்றுவரை எம்முடன் உணர்வுகளை பகிர்ந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் உளமார்ந்த நன்றிகளைத் தெரி விப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

(பயணத் தடை காரணமாக ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்கு அழைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.)

குடும்பத்தினர்

தொடர்புக்கு: விபுலானந்தா (கூட்டி மாஸ்ரர்)
077 773 8484 - 077 201 4623 (சகோதரன்)
கேதீசன் (மருமகன்) 077 394 6501
முகுந்தன் (மகன்) 0016478882000

இல.17,
செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

(6933)

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும். – கன்ஃப்யூஷியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தடை மருந்து ஏற்றலை விரைவுபடுத்த வேண்டும்

கொரோனாத் தடை மருந்து ஏற்றுவது தொடர்பில் அரசாங்கம் கருசனை காட்டி வருகிறது.

சீனாவின் தயாரிப்பான சினோபார்ம் கொரோனாத் தடைமருந்தை பொதுமக்களுக்கு ஏற்றுகின்ற நடவடிக்கை ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு முதற்கட்டமாக ஒதுக்கப்பட்ட மருந்தின் எண்ணிக்கை மிகச் சொற்பம் என்பதும் தெரிந்ததே.

மிகச் சொற்பமான தடை மருந்தை யாருக்கு ஏற்றுவது என்ற தீர்மானத்தை எடுப்பதில் சுகாதார வைத்திய அதிகாரிகள் மிகப்பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

அதேநேரம் கொரோனாத் தடை மருந்தை ஒருவருக்கு ஏற்றிவிட்டு மற்றவருக்கு வழங்காமல் விடும்போது, அது தேவையற்ற குழப்பங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தவே செய்யும்.

எனவே கொரோனாத் தடை மருந்தேற்றல் என்பது மிக வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயம்.

தற்போது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு வழங்கப்பபட்ட மருந்துகளின் அளவைப் பார்க்கும்போது,

இதே அளவுப் பிரமாணம் தொடர்ந்து வழங்கப்படும் பட்சத்தில் ஒட்டுமொத்த மக்களுக்கும் கொரோனாத் தடைமருந்தை ஏற்றி முடிப்பதற்குக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது ஆகும்.

ஆகவே கொரோனாத் தடை மருந்தை ஏற்ற ஆரம்பித்துவிட்டால், அதனை வேகப்படுத்தி அனைத்து மக்களுக்கும் அந்த மருந்து கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அந்நேரம் கொரோனாத் தடை மருந்தேற்றும்போது, மருந்து எடுத்துக் கொண்டவர்கள் தமக்குக் கொரோனாத் தொற்று வராது என்ற நினைப்பில், கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்கின்ற நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அசமந்தப் போக்கைக் கொண்டிருப்பர்.

இந்த அசமந்தப் போக்கினால்; தடை மருந்து ஏற்றாதவர்கள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

அதாவது, தடைமருந்தேற்றியவர்கள் கொரோனாத் தொற்றைப் பரப்புகின்ற காவிகளாகச் செயற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதனால், அவர்களின் நடமாட்டம் தடை மருந்து ஏற்றாதவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடிய ஏதுநிலை இருக்கிறது.

எனவே கொரோனாத் தொற்றிலிருந்து அனைத்து மக்களையும் பாதுகாப்பதன் பொருட்டு தடைமருந்தேற்றுகின்ற செயற்பாட்டை அதிதீவிரப்படுத்த வேண்டும் என்பது தான் நம் தாழ்மையான கருத்து.

இவ்வாறு தடைமருந்தேற்றலை விரைவுபடுத்துவதன்மூலம் நாடு இயல்பு நிலைக்கு விரைவாகத் திரும்பக்கூடிய சூழமைவும் உருவாகும்.

# கனடாவில் பள்ளி வளாகத்தில் 215 குழந்தைகளின் எலும்புக்கூடுகள் மீட்பு

(டொரென்டோ)

ஐரோப்பியர்கள் 400 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவை கண்டு பிடித்து வட அமெரிக்கா, தென் அமெரிக்க கண்டங்களில் குடியேறினார்கள்.

அப்போதே அந்த நாடுகளில் பூர்வ குடிமக்கள் ஏராளமானோர் வசித்து வந்தனர். அவர்கள் நாளை பிரச்சினை ஏதும் செய்துவிடக் கூடாது என்பதற்காக அந்த மக்களை ஐரோப்பியர்கள் இனப்படுகொலை செய்தனர். இவ்வாறு லட்சக் கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதனால் அமெரிக்க கண்டங்களில் பல இனங்கள் வேரோடு அழிந்தன. இதேபோலத் தான் கனடா நாட்டிலும் பூர்வ குடிமக்கள் ஏராளமானோரை கொன்று குவித்தார்கள். அங்கு நாகரிக ஆட்சி வந்த பிறகும்கூட பூர்வ குடிமக்களை ஒழிப்பது நிற்கவில்லை.

ஐரோப்பியர்கள் பூர்வ குடிமக்களுக்காக பள்ளிகளை நடத்தினார்கள். இது விடுதியுடன் கூடிய பள்ளி ஆகும். அவ்வாறு நடத்தப்பட்ட பள்ளிகளில் பல குழந்தைகள் மாயமான சம்பவம் நடைபெற்றது.

இந்த நிலையில் கம்லூப்ஸ் என்ற இடத்தில் பூர்வ குடிமக்கள் பள்ளி வளாகத்தில் 215 குழந்தைகளின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (4-6)

### கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில்

# மத குருமார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியிடம் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில் மத குருமார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் உரையாடியபோதே கடற்றொழில் அமைச்சரினால் குறித்த கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கான தடுப்பூசி விநியோகம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சரினால் தொடர்ச்சியாக அமைச்சரவையில் வலியுறுத்தப்பட்டு வருகின்றமையை இதன் போது சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, முதற்கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் கொரோனா பாதிப்பு அதி கமுள்ள பிரதேசங்களுக்கு அவை சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் குறித்த தீர்மானத்திற்கு நன்றி தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதிப்புக்கள் அதிகமுள்ள பகுதிகளில் வசித்து வருகின்ற அனைத்து மதங்களின் குருமார்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம் என்ற கருத்தையும் முன் வைத்தார்.

குறித்த கருத்தினை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டார். (ம-3)

## நீர் விநியோகமின்றி அழிவுறும் நெற்செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன பிரிவின் கீழ் உள்ள புதுமுறிப்பு குளத்தின் கீழ் சிவநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் சிலவயல் நிலங்களுக்கு முறையான நீர்ப்பாசனமின்றி கருகி எரிந்துள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் சுமார் பத்து ஏக்கர் வரையான வயல் நிலங்களுக்கு முறையான நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. விதைத்த பின்னர் ஒரு தடவை மாத்திரமே நீர் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின் 57 நாட்களை கடந்தும் இன்று வரை வயலுக்கு நீர் வழங்கப்படவில்லை. இதனால் அரைவாசி பயிர்கள் எரிந்து காணப்படுவதோடு, வயல் நிலங்கள் காய்ந்து புழுதி கிளம்புகிறது எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

திட்டக்குழுத் தலைவர், கமவிதானையார் ஆகியோரிடம் பல தடவைகள் வயலை காட்டி நீர் வழங்குமாறு கோரிக்கைவிடுத்தபோதும் இது வரை நீர் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (4-6,254,350)

## மற்றுமொரு எம்.பிக்கும் தொற்றியது கொரோனா

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவன் அதுகோரலவிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனியார் வைத்திய சாலை ஒன்றில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்ட நிலையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.

❖ ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும்.

❖ உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா?

❖ தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா!

❖ இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது; வழியும் விரிவானது; அதன் வழியே செல்வோர் பலர்.

❖ வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது; வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே.

(தொடரும்)

# தடுப்பூசி முற்பதிவு குறித்த போலிச்செய்தியை நம்பவேண்டாம்

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசியை பெறுவதற்கு முன்பதிவு செய்யுமாறு சுகாதார அமைச்சினால் இது வரை எந்த நடைமுறையும் முன்னெடுக்கப்படவில்லை என்று சுகாதார சேவைகள் துணை இயக்குநர் ஜெனரல் டாக்டர் ஹேமந்த ஹேராத் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பில் வட்ஸ்அப் மற்றும் குறுஞ்செய்தியை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

தடுப்பூசிக்கு பதிவு செய்யுமாறு சுகாதார அமைச்சகம் எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையையும் இதுவரை வெளியிடவில்லை.

சில நிறுவனங்கள் இதுபோன்ற பதிவு நடைமுறைகளைத் தொடங்கியுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்ததாகவும், அது குறித்து அந்த நிறுவனங்கள் சுகாதார அமைச்சகத்திற்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார். (4-6)

# இலங்கையில் சீனா முன்னெடுத்துள்ள திட்டங்களை கண்காணிக்கும் இந்தியா



(கொழும்பு)

இலங்கையில் சீனா முன்னெடுத்துள்ள கொழும்பு துறைமுக பொருளாதார நகர திட்டம் குறித்து மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக பொருளாதார நகர திட்டம் குறித்து நன்கு அறிந்த ஒருவர் இதனை தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

“இந்த திட்டங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

அதேநேரம் நம் நாட்டிற்கு மிக அருகில் நிகழும் எந்தவொரு வளர்ச்சியும் எம்மை எந்த வகையிலும் பாதிக்கின்றதா என்பது குறித்து மிக உன்னிப்பாகக் கண்காணிப்போம்.

“இது வணிக ரீதியான முயற்சியாக இருந்தால், நாங்கள் சொல்வதற்கு அதிகம் இல்லை, அது அவர்களின் விருப்பம். ஆனால் வேறு கூறுகள் இருந்தால் நிச்சயமாக அதைப் பார்ப்போம்” என அவர் மேலும் கூறியுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# இலங்கை பிரஜைகள் சீனமொழி கற்றுக்கொள்வது சிறந்தது

## வலியுறுத்துகிறார் வாசுதேவ



(கொழும்பு)

**இலங்கை பிரஜைகள் சீன நிறுவனங்களில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள, சீன மொழியைக் கற்றுக்கொள்வது சிறந்தது என்று நீர்ப்பாசன அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் பேதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

சீன நிறுவனங்களிடம் நாங்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அல்லது சீன வேலைத்திட்டங்களில் நாங்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் எமக்கு சீன மொழித் தெரிந்திருக்க வேண்டும் என்பது மேலதிக தகுதியாக அமையும்.

அதேவேளை, அண்மையில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட போர்ட் சிட்டி ஆணைக்குழுச் சட்டமூலம் என்பது அவசர அவசரமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதல்ல. அவ்வாறு எதிர்க்கட்சியினர் தெரிவிப்பது போல அரசாங்கத்திற்கு எந்தவொரு அவசரமும் இதில் இருக்கவில்லை.

அவ்வாறு போர்ட்சிட்டி ஆணைக்குழுச் சட்டத்தை தள்ளிவைத்திருந்தால் கொரோனா தொற்று முற்றிலும் இலங்கையை விட்டு வெளியேறியிருக்குமா?

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் இந்த சட்டத்தில் பல திருத்தங்களைக் கொண்டுவரும்படி ஏகோபித்த விதமாக தெரிவித்திருந்தோம்.

அதற்கமைய உச்சநீதிமன்றத்தின் வியாக்கியானத்திலும் திருத்தங்கள் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்ட நிலையில் நாங்கள் எதிர்பார்த்த பாதித்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன என மேலும் தெரிவித்தார். (4-6)

# கொரோனா நோயாளி தப்பியோட்டம்

(கொழும்பு)

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெகசின் வீதி பொரளை என்ற விலாசத்தை சேர்ந்த நபர் ஒருவர் கொரோனா நோயாளராக இனங்காணப்பட்ட பின்னர் அவரது வீட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

28 வயதுடைய குறித்த இளைஞருக்கு கடந்த 26ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (4-6)

# கப்பல் விவகாரத்தில் அரசு மௌனம் காத்தது ஏன்?

## சஜித் கேள்வி



(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றி எரிந்தமை தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொண்டு உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய பாதுகாப்பு குறித்து அடிக்கடி பேசும் அரசாங்கம், இலங்கை கடல் பரப்பிற்குள் இதுபோன்ற ஆபத்தான கப்பல் வரும் வரை ஏன் அமைதியாக இருந்தது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து சில கடல் மைல் தூரத்தில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து எரிந்துள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த கப்பல் யாருடைய அனுமதியுடன் இலங்கை கடல் பரப்பிற்குள் பயணித்தது? இந்த கப்பல் இலங்கையின் கடல் அமைப்புக்குள் நுழையும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையா அறிவித்தா? அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக் கொள்வார்கள் ? இதனால் ஏற்பட்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு கப்பல் உரித்துடைய நிறுவனம் இலங்கைக்கு எவ்வளவு தொகை இழப்பீடு வழங்க வேண்டும்? சேதத்தை யார் மதிப்பிடுவார்கள்? இழப்பீடு கிடைப்பதில் நம்பகத்தன்மை இருக்கின்றதா? என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (4-6)


## உலகளவில் கொரோனா

தொற்று : 170,202,430

உயிரிழப்பு : 3,539,538

(நேற்றைய நிலவரம் )

# கப்பலில் இருந்து வெளியேறிய இரசாயனத்தால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்த இரசாயன பொருட்கள் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த இரசாயன பொருட்கள் தொடர்பில் சரியான தகவல் வழங்கும் வரை அதில் ஏற்படக் கூடிய பாதிப்பு தொடர்பில் அறிவிப்பது கடினம் என விஞ்ஞானிகள் தெரிவித்துளளனர்.

கப்பலில் இருந்து வெளியேறியுள்ள பொருட்களால் நீண்ட கால புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளதாக கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் பொது மேலாளர் டர்னி பிரதிப் குமார தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தயவுசெய்து அந்த கடல் பகுதிக்கு வருகைத்தர வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதிக நச்சுத்தன்மை காரணமாக உடலுக்கு பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்த கூடும். அந்த மணல்களை தொடுவதனையும் தவிர்க்க வேண்டும் என அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (4-6)

### தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு

# உணவுப் பொருட்கள் வழங்குபவர்கள் மாவட்ட செயலகத்திற்கு தெரியப்படுத்தவும்

### மாவட்ட செயலர் அறிவிப்பு



( அக்கராயன் )

**அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புகள் நிவாரணங்களை தற்போது வழங்குவதாக இருந்தால் மாவட்டச் செயலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது. நிவாரணங்களை வழங்க முன் வருபவர்கள் பிரதேச செயலாளர் ஊடாக மாவட்டச் செயலகத்திற்கு தெரியப்படுத்தி நிவாரணப் பொருட்களை ஒரு ஒழுங்கு முறையில் வழங்கலாம்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்குரிய முதற்கட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இதற்கமைய முதல் கட்டமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5,000 ரூபாய் பெறுமதியான பொருள்கள் வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மிக விரைவில் பொருட்களை மக்களுடைய வீடுகளுக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6,350)

# விண்ணப்பங்கள் கோரல்




(கொழும்பு)

கிராம சேவகர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 பாடங்களிலும் சித்தியடைந்த 21- 35 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகள் சாதாரண தரத்தில் இல் ஒரே அமர்வில் கணிதம் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் (4C) ஆறுபாடங்களில் சித்தியடைந்திருந்தால் கிராம அலுவலர் பதவிக்காக விண்ணப்பிக்கமுடியும் போட்டிப்பரீட்சையில் சித்தியடைய பொது அறிவும் பொது உளச்சார்பும், மொழித்திறன் ஆகிய இருவினாத்தாளுக்கும் ஆகக்குறைந்தது ஒரு வினாத்தாளுக்கு 40 புள்ளிகளாவது பெறவேண்டும். ஆனால் நீண்டகாலமாக வேலை வாய்ப்புகளின்மையால் போட்டி அதிகமாயிருக்கும். எனவே 80 புள்ளிகளுக்குமேல் பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களை 2021.06. 28 இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் மேலதிக தகவல்களுக்கு 28.05.2021 வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலை பார்வையிடவும். (4-6)


# கண்ணீர் அஞ்சலி

ஜூன் 07 1960 — மே 28 2021



**அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா**

95ஆவது நிர்வாக சபை உறுப்பினர், 97ஆவது நிர்வாக சபை கௌரவ பொதுச்செயலாளர், 98ஆவது நிர்வாக சபை கௌரவ தலைவர், நூற்றாண்டு விழா நிர்வாக சபை உறுப்பினர், 101ஆவது நிர்வாக சபை மலர்குழுத் தலைவர், 102ஆவது நிர்வாக சபை சிரேஸ்ட தலைவர் மற்றும் ஆலோசனை சபை உறுப்பினர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் – அரியாலையூர்

## அமரர் ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி

**கல்விப் புலத்தின் பெருஞ் சொத்தே
கண்ணீருடன் விடை கொடுக்கின்றோம்
அரியலை அன்னையின் புதல்வியே எங்கு சென்றீர் ?
அரியாலையின் சுதேசியே கலங்கி நிற்கிறோம்
சமூக சேவகியே சுயதொழில் ஊக்குவிபாளரே
சகலரும் விரும்பும் நல் ஆசிரியரே
பல்கலையின் விரிவுரையாளரே எங்கு சென்றீர் ?
பாரில் அனைவரும் பரிதவிக்க ஏன் சென்றீர் ?
கண்ணீருடன் விடை கொடுக்கிறோம் அன்னையே
கலைவருதியே பிரிவால் கலங்கி நிற்கின்றோம்
இனியென்று காண்போம் உமது அன்பை
காலன் உம்மை பிரித்துச் சென்றானோ ?
ஆறவில்லை உம்பிரிவு அழுது தவிக்கின்றோம்
அன்னையே உன்முகம் காணத் தவிக்கின்றோம்
ஆண்டவன் அடியில் அமரருள் ஒருவாராகிட
ஆண்டவன் உமக்கு அருள்வான் அன்னையே !**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பதினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(C-2196)

**அரியாலை மக்கள் சார்பாக**
**102ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை - 2021**


# உரங்களை பெறமுடியாத கிளிநொச்சி விவசாயிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் தற்போது சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகள் உரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

30 வீதமான விவசாயிகளுக்கு உரம் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாகவும் சிறுபோக நெற்செய்கை தொடங்கி நாற்பது நாட்கள் கடந்த நிலையிலும் உரங்களை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருந்த போதிலும் உரத்தினை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பது விவசாயிகள் மத்தியில் விசனங்களை உருவாக்கி உள்ளது.

பயணத் தடைகள் காரணமாக கொழும்பில் இருந்தும் கமநல சேவை நிலையங்களுக்கு உரங்கள் கொண்டு வரப்பட வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரணைமடு உட்பட அனைத்து நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் தற்போது விவசாயிகள் உரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

பொலிசாரின் உதவியுடன் கமநல சேவை நிலையங்கள் உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்கும்படி கொழும்பில் இருந்து கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் சகல கமநல சேவை நிலையங்களுக்கும் அறிவித்தல்கள் வழங்க ப்பட்டுள்ள நிலையிலும் கிளிநொச்சியில் விவசாயிகள் உரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். (4-6,350)

# சிங்களத்தில் வெளியாகிறது “ நடுகல் ” நாவல்



ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய நடுகல் நாவல் சிங்களத்தில் வெளியாகின்றது.

போர்ச் சூழலில் பிறந்த ஒரு போராளிக்கும் அவனது தம்பிக்கும் இடையிலான பாசமாகவும் பார்வையாகவும் அமையும் நடுகல் தமிழில் பெரும் கவனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் தற்போது சிங்கள எழுத்தாளர் ஜீ.ஜீ.சரத் ஆனந்தா நாவலை மொழியாக்கம் செய்துள்ளார். மேலும் கடுல்ல என்ற சிங்களப் பதிப்பகம் இந்நாவலை வெளியிடவுள்ளது. (4-6)

# நூலக எரிப்பின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம் பொதுநூலகமானது 97 ஆயிரம் நூல்களுடனும் அரிய அரிச்சுவடிகளுடனும் தீ வைத்து எரித்து அழிக்கப்பட்டது.

மேற்படி நூலக எரிப்பின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை இரவு-07 மணியளவில் சூம் தொழில் நுட்பத்தின் ஊடாக நடைபெறவுள்ளது.

கோவிட்-19 பெருந் தொற்றுக் காரணமாக கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் நடைபெற்று வந்த இந்த நினைவேந்தலானது இம்முறை பொதுமக்கள் ஒன்றுகூட முடியாத காரணத்தால் இணைய வழியில் இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6,18)




# தேவதை கொடுத்த பரிசு



ஆனால், அவன் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காகத் தான் எல்லா மீன்களையும் விற்று கிடைக்கிற பணத்தை என் நண்பன் எடுத்துக் கொள்ளட்டும் என்று சொல்கிறேன்.

என் நண்பனோ, அதனை மறுத்து என்னை எடுத்துக் கொள்ளும் படியாகச் சொல்கிறான்.

நீயே அவனுக்கு எடுத்துக் கூறி அவன் குடும்பத்தை வறுமையில் இருந்து காப்பாற்று!" என்றான் பிரகாஷ்.

கடல் தேவதையோ சிரித்தபடியே இருவரையும் நோக்கியது. நீங்கள் இருவரும் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் உங்கள் குடும்ப நலன் கருதியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் குடும்பத்தின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் அன்பும், உங்கள் நல்லெண்ணமும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது.

அதனால் உங்கள் இருவருக்கும் உதவி புரியவே வந்துள்ளேன்" என்றது கடல் தேவதை.

பிறகு, பிரகாஷ் முன்பும், ஜெகதீஸ் முன்பும் இரண்டு மூட்டைகள் தோன்றின. கடல் தேவதையும் அங்கிருந்து மறைந்தாள்.

இருவரும் அந்த மூட்டைகளைப் பிரித்துப் பார்த்தனர். அந்த மூட்டைகளில் நிறையப் பொற்காசுகள் காணப்பட்டன.

இருவருமே அதனை தங்கள் ஒற்றுமைக்குக் கிடைத்த பரிசாகவே நினைத்துக் கொண்டனர். அதைக் கொண்டு பெரிய பணக்காரர்கள் ஆயினர்.

(முற்றும்)

# மகாபாரதம்




சுதர்சன சக்கரத்தைக் கையில் ஏந்தினார். இதைக் கண்ட பீஷ்மர் ஆனந்தம் அடைந்தார்.

"கண்ணன் கையால் மரணமா? அதை வரவேற்கிறேன்" என்று தூய சிந்தனை அடைந்தார்.

அருச்சுனன் கண்ணனின் செயல் கண்டு மனம் பதறி ஓடோடி கண்ணனிடம் சென்று காலைப் பிடித்துக் கொண்டு "நீங்கள் ஏன் ஆயுதம் ஏந்த வேண்டும்.

நான் போரிடேன் என்ற உங்கள் சபதம் என்னவாயிற்று? என்னை உற்சாகப்படுத்த இச்செயலா? அப்படியாயின் இதோ புறப்பட்டேன். சினம் வேண்டாம்" என வேண்டினான்.

கண்ணனின் ஆவேசம் தணிந்தது. பின் அவனின் காண்டீபம் இடியென முழங்கியது. யானைகள் சாய்ந்தன. குதிரைகள் வீழ்ந்தன. காலாட் படையினர் சரிந்தனர். மாலை நெருங்க அன்றைய போர் முடிவுக்கு வந்தது.

### நான்காம் நாள் போர்

நான்காம் நாள் பீஷ்மர் வியாளம் என்ற வியூகத்தை அமைத்தார். ஐந்து பனைகளை அடையாளமாக உடைய கொடியுடன் போர் புரிந்தார்.

அனுமானைச் சின்னமாகக்கொண்ட கொடியுடன் அவ்வனுமானின் பேராற்றலுடன் போரிட்டான் அருச்சுனன்.

அபிமன்யு போர் முனைக்கு வந்தான். அவனைப் பூரிசிரவசு, அஸ்வத்தாமா, சல்லியன் ஆகியோர் எதிர்த்துப் போர் புரிந்தனர். ஒரு புறம் பீமன், துரியோதனின் தம்பியர் எண்மரைக் கொன்றான்.

தன்கதையால்யானைகளை வீழ்த்தினான். பீமனின் மைந்தன் கடோத்கஜன் வெற்றி மேல் வெற்றி பெற்றான்.

(தொடரும்)

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை இரு வாரங்களில் குறைவடையலாம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

“பயணக் கட்டுப்பாடு விதி முறை மற்றும் சுகாதார நடை முறைகளை மக்கள் முறையாகப் பின்பற்றினால் இன்னும் இரண்டு வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையக்கூடும்” இவ்வாறு அரச வைத்திய அதிகாரி சங்கத்தின் பிரதிநிதி வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

“கடுமையான பயணக் கட்டுப் பாடுகள் மூலம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அவதானித் துள்ளோம். இதன்பிரகாரம் இன்னும் 10 நாட்களில், நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையக்கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

எனவே, பயணக் கட்டுப்பாடு நடைமுறைகளை உரிய வகையில் தொடர்ந்தும் பின்பற்றுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு பின்பற்றினால் இன்னும் இரு வாரங்களில், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படும்” என்றார். (ம-03)

# முல்லைத்தீவு மாவட்டத்திலும் ட்ரோன்மூலம் கண்காணிப்பு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் முடக்கப்பட்ட நகரங்களின் பகுதிகளில் ட்ரோன் கமராவினை பறக்கவிட்டு மக்கள் நடமாட்டத்தினை கண்காணிக்கும் நடவடிக்கையில் விமானப் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 9 கிராமங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில் நகர் புறங்களை அண்டிய பகுதிகளில் பொலிஸார் ட்ரோன் கமராவினை பறக்கவிட்டு மக்கள் நடமாட்டத்தினை கண்காணிக்கும் நடவடிக்கைகளை தொடக்கி வைத்துள்ளார்கள்.

மாவட்டத்தின் ஏனைய நகரங்களின் பகுதிகளிலும் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு விமானப் படையினர் தெரிவித்துள்ளார்கள். (ம-03,281)

# யாழில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இடையே கொரோனா பரவல்

## சமுர்த்தி வங்கிகள், மகா சங்கம் பூட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடையே கொரோனாத் தொற்றானது பரவி வருவதன் காரணமாக மாவட்டத்திலுள்ள சமுர்த்தி அலுவலக வங்கிகள், மகா சங்கம் என்பன பூட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக கோப்பாய் பிரதேச செயலக சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கி, நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட காரியாலயம், மகா சங்கம், திருநெல்வேலி சமுர்த்தி வங்கி மற்றும் கரவெட்டி பிரதேச செயலகத்தின் துன்னாலை சமுர்த்தி வங்கி, உடுப்பிட்டி சமுர்த்தி வங்கி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பருத்தித்துறை சமுர்த்தி வங்கி என்பன உத்தியோகத்தர்கள் இடையே பரவிய கொரோனாத் தொற்றுக் காரணமாக பூட்டப்பட்டுள்ளன.

5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இடையே கொரோனா பரவியுள்ளதால் பாரிய சிக்கல் நிலை உருவாகியுள்ளது. (ம-03)

# சாந்தபுரம் முடக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - சாந்தபுரம் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டு, மக்கள் வெளியே செல்வதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

சாந்தபுரம் கிராமத்தில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், பயணக் கட்டுப்பாட்டு நடைமுறை இறுக்கமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. (ம-03,316)

# சட்டத்துக்கு புறம்பானவகையில் மதுபானங்களை வீட்டில் பதுக்கி வைத்திருந்தவர் கைது

## மானிப்பாய் கட்டுடையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் சட்டத்துக்குப் புறம்பாக மதுபானங்களை வீட்டில் பதுக்கிவைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

48 வயதுடைய சந்தேக நபரிடமிருந்து 35 பியர் ரின்களும் 6 மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலில் அடிப்படையில் சந்தேக நபரின் வீட்டுக்கு சிவில் உடையில் சென்ற மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மதுபானத்தை வாங்க விசாரித்துள்ளனர். சந்தேக நபரும் மதுபான விலையின் பல மடங்கு விலையைக் கூறி விற்பனை செய்ய முற்பட்ட போது பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.(ம-03,18,33,104)

# வவுனியாவில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(வவுனியா )

வவுனியா திருநாவற்குளத்தில் 9 பேர் உட்பட 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில், வவுனியா திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒன்பது பேருக்கும் சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கும்ஓமேக்கா ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் கோயில்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் மகாரம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் குட்செட் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும் செட்டிகுளம் பகுதியில் ஒருவருக்கும் பட்டானிச்சூர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும் என 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-03,250 )


கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திருமதி
பத்மஜா பாஸ்கரக் குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
நடராஜக் குருக்கள்
பத்மநாப சர்மா
அவர்கள் நேற்று (29.05.2021) சனிக்கிழமை
இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(C-2198)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை


# மின்சார சபைக்கு ரூ.50 கோடி இலாபம்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தால் ரூ.50 கோடி இலாபம் அடைந்துள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத்தினால் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையினால் 200 யுனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலங்கை மின்சார சபையினால் முடிந்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான யுனிட் மின்சாரம், டீசல் மூலம் உற்பத்தி செய்யப்பட்டால் அதற்காக ஒரு யுனிட்டுக்கு ரூ.30 செலவாகும், நீர் மின்சக்தியைப் பயன்படுத்தினால் ரூ.2 மட்டுமே செலவாகும்.

அதன்படி, இலங்கை மின்சார சபை ஒரு யுனிட்டுக்கு ரூ .28 இலாபம் ஈட்டியுள்ளதுடன், மொத்த இலாபமாக சுமார் 500 மில்லியன் ரூபாய் ஈட்டியுள்ளதாக மின்சார சபையின் தலைவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2021 இல் வெளியிடப்பட்டது.